முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) நிலையறி பரீட்சை
General Certificate of Education (Ord. Level) 2021

தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I,II Communication and MediaStudies I,II	87 | T | I,II	மூன்று மணித்தியாலம் Three Hours

அறிவுறுத்தல்:

1. **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
2. **பின்வரும் வினாக்களில் மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடியிடுக**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தினை ஒத்த வட்த்தினுள்ளே புள்ளடியிடுக.**

பகுதி I

1) இலங்கையில் இருந்து வெளிவந்த முதலாவது தமிழ்ச் செய்திப் பத்திரிகை
(1) லக்மினி பஹன *(2)* உதயதாரகை *(3)* இந்து சாதனம் *(4)* பல்கலையன்

2) புத்தகமொன்றை முதற்தடவையாக அச்சிடும் வேளையில் சர்வதேச தரநிர்ணய புத்தக இலக்கம் (ISBN) பெற்றுக் கொள்ளப்படுவது
(1) வெகுசன ஊடக அமைச்சிடமிருந்து
(2) கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடமிருந்து
(3) தேசிய நூலகம் மற்றும் ஆவணச் சேவைகள் சபையிடமிருந்து
(4) தேசிய கல்வி நிறுவகத்திடமிருந்து

3) குழுவுக்கும் தொடர்பாடுபவருக்கும் இடையிலான உறவு நிலை குறைந்தளவில் வெளிப்படுத்தப்படுவது?
(1) செயலமர்வு ஒன்றின் அறிவுறுத்துபவரால்
(2) கூட்டமைப்பொன்றின் தலைவரால்
(3) மருத்துவ சிகிச்சை நிலையமொன்றின் நோயாளியினால்
(4) ஆசிரிய பீடமொன்றின் பிரதம ஆசிரியரினால்.

4) தாரா ஒரு வானொலி அறிவிப்பாளர் அவரது தொழிலுடன் மிகத் தொடர்புடைய தொடர்பாடல் வடிவம்
(1) முறைசார் தொடர்பாடல் வடிவம் *(2)* வெகுசனத் தொடர்பாடல்
(3) செவிப்புலத் தொடர்பாடல் *(4)* வாய்மொழித் தொடர்பாடல்

5) தொலைக்காட்சி நாடகமொன்றினைப் பார்த்துக் கொண்டிருந்த சுபஸ்தி அநத நாடகத்தில் நடித்த சிறுவனும் தனது சகோதரனும் ஒரே முகச் சாயலினைக் கொண்டிருந்ததாக உணர்ந்தாள். இவ்வாறு உணர்வதற்குக் காரணமான தொடர்பாடல் வகை
(1) காட்சித் தொடர்பாடல் *(2)* ஆட்களிடைத் தொடர்பாடல்
(3) வெகுசனத் தொடர்பாடல் *(4)* ஆளுள் அல்லது தனியாள் தொடர்பாடல்

6) நீங்கள் வானொலி உரையாடல் ஒன்றினை செவிமடுக்கின்றீர்கள். அதன் அடிப்படை அம்சங்களின் தொடர்வரிசை யாது?
(1) தொடர்பாடுபவர் → தகவல் → பெறுநர்
(2) தொடர்பாடுபவர் → அறிவிப்பாளர் →பெறுநர்

(3) அறிவிப்பாளர் → ஊடகவழி → பெறுநர்
(4) தொடர்பாடுபவர் → ஊடக வழி → தகவல்

7) கவட்டகத்தியா, உதயதாரகை, தினமின ஆகிய பத்திரிகைகள் இலங்கையின் எவ்வகை ஊடக உரிமையாண்மையினுள் உள்ளடங்குகின்றது?
(1) அரசாங்கம் மற்றும் தனியார்
(2) பொதுசன அமைப்புக்களுக்குச் சொந்தமானவை
(3) தனிப்பட்ட வர்த்தகர்களுக்குச் சொந்தமானவை.
(4) ஆசிரியர் உரிமைத்துவத்திற்குச் சொந்தமானவை.

8) பஸ்தரிப்பிடமொன்றில் பஸ்ஸிற்காகக் காத்திருக்கும் பயணிகள் குழுவொன்றிடையே நடைபெறக் கூடிய தொடர்பாடல்
(1) ஆட்களிடைத் தொடர்பாடல் (2) முறைசாராத் தொடர்பாடல்
(3) ஆளுள் அல்லது அகமுகித்தொடர்பாடல் (4) முறைசார் தொடர்பாடல்

9) அமலனும் அசாமும் தொலைபேசி வாயிலாக உரையாடிக் கொண்டிருந்தனர். திடீரென அமலன் பேசுவது அசாமுக்குக் கேட்கவில்லை. சிறிது நேரத்தின் பின்னர் தொலைபேசி அழைப்பும் துண்டிக்கப்பட்டது. இங்கு நடைபெற்றது
(1) மொழிசார் தடை (2) ஊடகத் தடை
(3) காட்சித்தடை (4) தொழினுட்பத்தடை

10) வெகுசனத் தொடர்பாடலின் இயல்பிற்குப் பொருத்தமானது
(1) இருவழித் தொடர்பாடல் (2) பின்னூட்டல் உடனடியானது
(3) சுயதணிக்கை காணப்படக்கூடாது. (4) பகிரங்கமான தகவல் வெளிப்படுத்துகை

11) தொலைக்காட்சியின் செய்தி சஞ்சிகை நிகழ்ச்சிகள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) அது பல பாகங்களினைக் கொண்டிருக்கலாம்.
(2) அது எப்போதும் ஒரேயொரு கருப்பொருளினையே பயன்படுத்தும்.
(3) நேரலை ஒலி / ஒளி பரப்புக்களை அதிகம் கொண்டிருக்கும்.
(4) மென் செய்திகளினை அது உள்ளடக்கியிருக்காது.

12). தகவல்களின் பெறுமதியைத் தீர்மானிக்கும் காரணியாக அமையாதது எது?
(1) சரியாகவும் சுருக்கமாகவும் இருத்தல்.
(2) இயங்கு தன்மையுடனும் தளர்வாகவும் இருத்தல்.
(3) சமகாலத்திற்கானதாகவும் தொடர்படையதாகவும் இருத்தல்.
(4) நோக்கத்துடன் கூடியதாக முழுமையானதாக இருத்தல்.

13). செய்திப் பத்திரிகையொன்றில் படைப்பாக்க வழியிலான வஞ்சகப் புகிழ்ச்சியின் பயன்பாடு இயலுமை அற்று இருப்பது
(1) அறிக்கையொன்றிலாகும். (2) பத்தி எழுத்தொன்றில்
(3) கேலிச் சித்திரங்களில் (4) தலையங்கமொன்றில்

14). கம்பனி ஒன்றின் ஊழியர் தான் மட்டுமே கண்ணால் கண்ட ஒரு முறைசார் விடயத்தை அலுவலக ஊழியர்கள் அனைவருக்குமே தெரியப்படுத்தினார். இச்சந்தர்ப்பத்தினை வெளிப்படுத்துவது
(1) தனிச் சங்கிலி மாதிரி (2) கொத்தணி மாதிரி
(3) வதந்திச் சங்கிலி மாதிரி (4) நிகழ்தகவு மாதிரி

15). இலங்கையின் முதலாவது புத்தகம் என அழைக்கப்படுவது
(1) இலத்தீன் இலக்கணம் (2) வஸ்ர சூத்திரம்
(3) மாசிக தெக்க (4) லன்தேசி

16). இலங்கையில் அச்சிடல் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது?
(1) போர்த்துக்கேயர் காலத்தில்
(2) ஆங்கிலேயர் காலத்தில்

(3) டச்சுக் காலத்தில்
(4) காலணித்துவத்துக்கு முன்னைய நிர்வாக காலகட்டத்தில்.

17) ஒரு திரைப்படத்தின் கட்டமைப்புத் தயார்ப்படுத்தலானது அடிப்படையில் தீர்மானிக்கப்படுவது
(1) எழுத்துரு அமைக்கும் போது (2) படத்தொகுப்பு இடம்பெறும் போது
(3) நடிப்பின் இலக்காக (4) தயாரிப்பாளரின் குறிக்கோளின் பேரில்

18) பயிற்சிப் புகைப்படவியலாளர் ஒருவரின் பார்வையில் புகைப்பட நாடாவினைக் கொண்டியங்கும் கமராக்களைவிட எண்மான கமராக்கள் முக்கியமானவையாக இருப்பது புகைப்படங்களை அவற்றின் மூலம்
(1) உடனடியாகப் பார்வையிடலாம் என்பதாகும்.
(2) இலகுவில் சேமிக்கலாம் என்பதனால்
(3) அதிகம் பேருக்கு அனுப்பலாம் என்பதனால்
(4) பெரிதாக்கி அச்சிடலாம் என்பதனால்.

19) வானொலி நாடகம் பற்றிய பொருத்தமற்ற கூற்றினை தெரிவு செய்க.
(1) பலபாத்திரங்கள் இடம் பெற்றிருக்கும்.
(2) ஒலிக் குறிப்புக்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்படும்.
(3) உள்ளத்தில் உளத்தோற்றச் சித்திரங்கள் உருவாகும்.
(4) நிகழ்வினைத் தனித்துத் தெரியச் செய்ய இசைபயன்படும்.

20) ஒரு பாடசாலை ஒன்று தனது இருநூற்றாண்டு விழாவினை வெகுவிமரிசையாகக் கொண்டாடத் தீர்மானித்தது. அதனை ஊடகங்களில் செய்தியாகப் பிரசுரிக்கும் நோக்கோடு அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுக் குறித்த விடயம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. இது தொடர்புபடுவது
(1) நேர்காணல் (2) ஒரு பத்திரிகைக் குறிப்பு
(3) ஒரு உத்தியோகபூர்வ அறிவிப்பு (4) ஒரு பத்திரிகையாளர் மாநாடு

21) கலங்கரை விளக்க நுட்ப முறை மிகப் பொருத்தமாவது
(1) தனியாள் தொடர்பாடல் (2) ஆட்களிடைத் தொடர்பாடல்
(3) குழுத்தொடர்பாடல் (4) வெகுசனத் தொடர்பாடல்

22) இலங்கை தொலைக்காட்சி வகிபாகத்தின் முன்னோடி யார்?
(1) ஜோர்ஜ் ஈஸ்ட்மன் (2) விளாடிமீர்ஸ்வொரகன்
(3) டெகியுரே (4) ஸான் விக்கிரமசிங்க

23) செய்திப் பத்திரிகைக்கான புகைப்படங்கள் தொடர்பிலான சில கூற்றுக்கள் பின்வருமாறு
A - கல்வியறிவற்ற மக்களுக்கு அவசியமானது
B - செய்தியின் நம்பகத்தன்மையை அதிகரிக்கின்றது.
C- கவருந் தன்மையை செய்திப் பத்திரிகை பெறுகின்றது.
மேற்குறித்தவற்றில் சரியான கூற்றுக்களாக அமைவன.
(1) A யும் B யும் மாத்திரம் (2) A யும் C யும் மாத்திரம்
(3) B யும் C யும் மாத்திரம் (4) A, B, C அனைத்தும்

24) பாடமொன்றின் முடிவில் அது சம்பந்தமான பிரச்சினைகளினை முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளித்தல் ஆசிரியரொருவரின் கற்பித்தற் பாணியாக இருந்தது. இதைப்பற்றி அறிந்திருந்த அஸ்வினி இன்றைய நாளிலும் தனக்குரிய வாய்ப்பிற்காகக் காத்திருந்தார். அவளால் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் செயன்முறையின் பகுதி
(1) விளைவு (Effect) (2) அனுபவங்களின் சட்டகம் (Frame of experience)
(3) சூழலமைவு (Context) (4) பின்னூட்டல் (Feedback)

www.ksou.lk

25) செய்திப் பத்திரிகை விளம்பரங்கள் பற்றிய தவறான கூற்றினைத் தெரிவு செய்க.
(1) செய்திகளுடன் ஒப்பிடும் போது விளம்பரங்களுக்கு குறைந்த இடமே ஒதுக்கப்படுகின்றது.
(2) நிறுவனத்தின் நாளாந்தச் செலவுகள் மற்றும் பராமரிப்பு விளம்பரங்களில் தங்கியுள்ளது.
(3) நாளாந்த செய்திப் பத்திரிகைத் திட்டமிடல் அமைப்பொழுங்கில் விளம்பரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.
(4) செய்திப் பத்திரிகை உள்ளடக்கத்தில் வேறுபட்ட வழிகளில் செல்வாக்குச் செலுத்துவதற்கு விளம்பரதாரர்களுக்கு வாய்ப்புக்கள் உண்டு.

26. பத்திரிகையில் நாளாந்தம் வெளியாகும் செய்திகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. கிளிநொச்சியில் ரயில் விபத்தில் 5 பேர் மரணம்
B. வலைப்பந்தாட்ட வீராங்கனைக்கு கௌரவம்
C. வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் பொங்கல் வழிபாடு
D. உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையில் குண்டு வெடிப்பு
மேற்குறித்த செய்திகளில் வன்செய்தி மற்றும் மென்செய்தியாகச் சரியான ஒழுங்குமுறையில் வகைப்படுத்தப்பட்ட விடையைத் தெரிவு செய்க.
(1) வன்செய்தி, மென்செய்தி, மென்செய்தி, மென்செய்தி.
(2) வன்செய்தி, மென்செய்தி, மென்செய்தி, வன்செய்தி.
(3) மென்செய்தி, வன்செய்தி, மென்செய்தி, வன்செய்தி.
(4) மென்செய்தி, வன்செய்தி, வன்செய்தி, மென்செய்தி.

27. விரிவுரையொன்றில் புத்தகமொன்றிலிருந்தான குறித்தவொரு வரைபடமொன்றைப் பங்கேற்பாளர்களுக்கு காட்டப்பட வேண்டிய தேவை உங்களுக்கு உடனடியாக எழுவதாக வைத்துக் கொள்க. இந்த இலக்கிற்காக உங்கள் தெரிவாக அமைவது
(1) துரித /காட்சி எறிவை. (2) பல்லூடக எறிவை
(3) மேந்தலை எறிவை (4) வழுக்கி எறிவை

28. A - கிரிக்கெற் விளையாட்டு நிகழ்ச்சியொன்றின் நேரடிவர்ணனை
B - தேர்தல் முடிவுகளின் ஒலிபரப்பு
C - பிரதான செய்தி அறிக்கை
மேற்குறித்தவற்றுள் வனொலியின் நேரலை நிகழ்ச்சிகளாக இடம்பிடிக்கக் கூடியவை.
(1) A யும் B யும் (2) A யும் C யும்
(3) B யும் C யும் (4) A, B, C ஆகிய அனைத்தும்

29. ஒரே தொலைக்காட்சி நிகழ்ச்சியானது செய்தி, நடப்பு விவகாரங்கள், உணர்திறன்மிக்க உணர்வு, பல்வகைமை எனப் பல பண்புகள் கொண்ட தொகுதிகளையும் உள்ளடக்கியிருக்குமானால் அது
(1) விவரண நிகழ்ச்சி (2) சோப் ஒபேரா
(3) மெய்மை நிகழ்ச்சி (4) சஞ்சிகை நிகழ்ச்சி

30. செய்திப் பத்திரிகை குழுவாகப் பணியாற்றுவதன் பெறுபேறாகும். எனினும் அதன் பொறுப்புடமை தங்கியிருப்பது
(1) ஆசிரியர் பீட பணிப்பாளரிடம் (2) பிரதம ஆசிரியரிடம்
(3) பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரிடம் (4) தலைவரிடம்

31. இலங்கையில் அதிகமான செய்தி நாளிதழ் அச்சிடப்படும் அளவு
(1) புரோட்சீட் (Broad Sheet) (2) டப்லொயிட் (taploid)
(3) முழு டெமி (Ful Demy) (4) கொம்பெக்ட் (Compact)

32. இணைய வானொலியுடன் தொடர்பற்றதைத் தெரிவு செய்க.
(1) பண்பலை வானொலியுடன் ஒப்பிடுகையில் செலவீனம் குறைவானது
(2) உலகின் எந்த இடத்தில் இருந்தும் கிரகிக்க முடியும்.
(3) கட்டணம் செலுத்தி உரிமம் பெறுதல் அவசியமானது.
(4) எளிமையான உபகரணத் தொகுதியுடன் செயற்படுத்த முடியும்.

www.ikedu.lk

33. இலங்கை தொலைத்தொடர்பு பரிவத்தனை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் அமையாதது பின்வருவனவற்றுள் எது?
(1) வானொலி அலைவரிசைகளுக்கு உரிமம் வழங்குதல்.
(2) தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்வது
(3) இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஒழுங்கு வழிகளை அமுலாக்குவது
(4) ஊடக அலைவரிசைகளினை எச்சரிப்பது மற்றும் உரிமங்களை இரத்துச் செய்வது.

34. புகைப்படச் சுருள் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. புகைப்படச் சுருளானது பொதி செய்யப்பட்டிருப்பது ஒளி உட்புகாத பாதுகாப்பான சிறிய பிளாஸ்ரிக் கொள்கலனிலாகும்.
B. புகைப்படச் சுருளை அதிகம் வெப்பம் சூழ்ந்த இடங்களில் வைத்துப் பாதுகாக்க வேண்டும்.
C. கமராவில் உட்படுத்தப்பட்ட படச்சுருளை புகைப்படம் எடுத்த பின்பு இரசாயன செயற்பாட்டிற்கு உட்படுத்திய பின்னரே உண்மையான புகைப்படத்தைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.
இவற்றுள் தவறானவை.
(1) A (2) B (3) A, B (4) மேற்கூறிய எதுவுமில்லை.

35. நாணயக் கணக்கீட்டு இயந்திர பண்பாக கொள்ள முடியாதது.
(1) போலி நாணயத்தாள்களினை வேறுபடுத்தி அறிய முடிதல்.
(2) நாணயத்தாள்களின் பெறுமதியை கணக்கெடுக்கின்றது.
(3) பொதுவாக ஒரு முறையில் ஒரே வகையிலான நாணயத்தாள்களே இடப்படுகின்றன.
(4) நாணயத்தாள்களை எண்ணுவதற்கான நேரத்தினை மீதப்படுத்துகின்றன.

36. தகவல் அல்லது ஓர் செய்திப் பரிமாற்றம் ஏதேனும் ஓர் ஊடகம் வழியாக நிகழ்த்தப்பட்டால் அது?
(1) வெகுசன தொடர்பாடல் (2) தொடர்பாடல்
(3) குழுத் தொடர்பாடல் (4) ஆளிடைத் தொடர்பாடல்

37. "பொது மக்கள் விரும்பிப் பார்க்கும் செய்தி, விளம்பரம், கருத்துக்கள் வேறு விடயங்களினை உள்ளடக்கி தினசரி, வாராந்தம் வெளியாகும் அச்சூடகமே பத்திரிகை" என வரைவிலக்கணப்படுத்தியது
(1) யுனெஸ்கோ (2) ஐரோப்பிய ஆணைக்குழு
(3) இலங்கை பத்திரிகை சபை (4) ஒக்ஸ்போர்ட் அகராதி

38. திரைப்படம் அல்லது தொலைக்காட்சி போன்றவற்றின் படைப்புக்கு பின்னணி இசை வழங்குவதனால் பூர்த்தி செய்யப்படுவது
(1) அக்காட்சியின் வெறுமையை நீக்கிக் கொள்வது
(2) அக்காட்சியின் கருத்தை வெளிப்படுத்துவது
(3) காட்சிகளின் படங்களை மீறிப் புதிய கருத்துக்களை வெளிக்கொணர்வது
(4) அக்காட்சிகளுக்கும் பார்வையாளர்களைக் கவர்ந்து கொள்வது

39. குறுந்தூர தொலைக்காட்சி வலைப்பின்னல் ஏற்படுத்திக் கொள்வது பிரதானமாக,
(1) செய்திகளையும், அறிவித்தல்களையும் பரப்புவதற்காக
(2) பாதுகாப்பு மற்றும் தேடல்களுக்காக
(3) கல்வி கலாசார சம்பவங்களுக்காக
(4) விரோத இரசனையை ஏற்படுத்துவதற்காக

40. கமரா ஒன்றில் கட்டாயமாக இருக்க வேண்டிய பகுதிகளில் உள்ளடங்காதது
(1) வில்லை (Lense) (2) எதிர்ப்படலம் (Negative)
(3) வில்லைத் தூரம் (Aperture) (4) துவாரப் படலை (Shutter)

(40 x 1 = 40 புள்ளிகள்)

www.ked.lk

முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□, □□□□□□ □□□□□□□

Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர்) நிலையறி பரீட்சை 2021
General Certificate of Education (Ord. Level) 2021

தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I,II **Communication and MediaStudies I,II**	**87**	**T**	**I,II**	**மூன்று மணித்தியாலம்** **Three Hours**

அறிவுறுத்தல்:

1. **முதலாம்** வினாவையும் எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
2. **முதலாம்** வினாவிற்கு ***20*** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் ***10*** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்

பகுதி II

01. தற்போது நடைபெறும் உலகக் கிண்ண கிரிக்கற் போட்டித் தொடர் பற்றிய தகவல்களை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பெறுகை செய்ய முடிகின்றது.

1) வானொலி ஊடகத்தின் தனித்துவமான இயல்புகள் 2 தருக.

2) மேற்கூறப்பட்ட சந்தரப்பம் எவ்வகையான தொடர்பாடலில் உள்ளடங்குகின்றது.

3) வானொலி ஊடகத்தின் நிகழ்ச்சிகள் பலவகைகளில் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறான முறைகள் 4 தருக.

4) வானொலி ஊடகத்தில் இப்போட்டித் தொடர் தொடர்பான நேரடி வர்ணனை இடம் பெற்றது. இது தவிர்ந்த நேடி வர்ணனை நிகழ்ச்சிக்கான உதாரணங்கள் 2 தருக.

5) போட்டித் தொடரை வானொலியில் செவிமடுத்ததைவிட தொலைக்காட்சியில் பார்த்ததன் மூலம் அதிக தகவல்களையும், இரசனையையும் பெற்றோம் எனச் சில பார்வையாளர்கள் குறிப்பிட்டனர். இதற்கான காரணங்களாக நீர் கருதுபவை 2 குறிப்பிடுக.

6) மேற்படி விளையாட்டுத் தொடரைத் தொலைக்காட்சியில் பார்வையிட்ட ரவி அது பற்றித் தனது சகபாடிகளுக்கும் விபரமாகத் தெரிவித்தான். இங்கு பயன்படுத்தியிருக்கக் கூடிய தொடர்பாடல் வடிவங்கள் 2 தருக.

7) வானொலியில் இத்தொடரை செவிமடுத்ததன் மூலம் கல்விக்குத் தேவையான தகவலைப் பெற்றதாக ரவி குறிப்பிட்டிருந்தார். இதுபோன்று இவ் ஊடகத்தின் பயன்பாடுகள் 4 தருக.

8) வானொலி ஊடகமானது இவ் வர்ணனையில் ஒருவழித் தொடர்பாடலைப் பின்பற்றியது இவ் ஒரு வழித் தொடர்பாடலை இருவழி நிலைக்கு மாற்ற உதவும் காரணி எது?

9) வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பன உள்ளடங்கும் ஊடக வகையைக் குறிப்பிடுவதோடு, இது தவிர்ந்த ஏனைய ஊடக வகைகளையும் குறிப்பிடுக.

10) தொலைக்காட்சி ஊடகம் வழியாகப் பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்ததும் எதிர்மறையான தாக்கங்கள் சிலவற்றையும் பார்வையாளர் பெறுகின்றனர் . அவ்வாறான விளைவுகள் 2 தருக.

www.ikeu.lk


02. கௌதம் சுயாதீனமான செய்திப் பத்திரிகை ஊடகவியலாளராவார். அதேவேளை வானொலி ஊடகமொன்றுடனும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக அவர் தொடர்புகளைப் பேணிக் கொள்கிறார்.

1) கௌதமுக்கு முக்கியமானதாக அமையும் இரண்டு சர்வதேச செய்தி முகவரகங்களைப் பெயரிடுக.
2) உள்ளூர் செய்தி அறிக்கையிடலில் கௌதம் பயன்படுத்தக்கூடும் என நீங்கள் எதிர்பார்க்கும் நான்கு செய்தி மூலங்களைச் சுருக்கமாக விளக்குக.
3) தயாரிப்பு பணியில் கௌதம் பங்களிக்கக்கூடிய மூன்று வகை வானொலி நிகழ்ச்சிகளைத் தனித்தனியாக விவரிக்குக.
4) செய்திப் பத்திரிகையிலும் வானொலி ஊடகத்திலும் பயன்படும் மொழி தொடர்பில் அவதானிக்கப்படக்கூடிய நான்கு முக்கிய வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

03. 'தொடர்பாடலின் செயற்பாடுகள்' என்னும் பொருளில் உங்கள் வகுப்பு மாணவர்களுக்குப் பேச்சொன்றை நிகழத்துமாறு நீங்கள் பணிக்கப்பட்டுள்ளீர்கள்.

1) இது, எந்தவகையான தொடர்பாடல் வகையினுள் உள்ளடங்குகின்றது?
2) உங்கள் பேச்சில் 'வெளிச்சவீட்டுத் தொழினுட்பம்' எவ்வாறு உங்களால் பயன்படுத்தப்படும் என்பதை விளக்குக.
3) உங்கள் பேச்சினை மேலும் கவனயீர்ப்புக்குள்ளாக்குவதற்கு நீங்கள் பயன்படுத்த எண்ணியுள்ள மூன்று வாய்மொழி சாராத தொடர்பாடல் முறைகளைத் தனித்தனியாக விளக்குக.
4) வெகுசனத் தொடர்பாடலின் நான்கு அடிப்படை இயல்புகளை விவரிக்குக.

04.



1) மேற்குறித்த வரிப்படம் ஹரோல்ட் லாஸ்வெல்லின் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்குமானால், இறுதியிலுள்ள Xஐப் பெயரிடுக.
2) தொடர்பாபடலின் செயற்பாடுகள் X உடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளன. தொடர்பாடலின் நான்கு முக்கியமான செயற்பாடுகளும் யாவை?
3) பாடசாலை வகுப்பறையில் இடம்பெறுவதும் ஒரு தொடர்பாடல் நடவடிக்கையே ஆகும். பாடசாலை வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய எறிவையற்ற வகுப்பறை ஊடக உபகரணங்கள் மூன்று பயன்படுத்தப்படும் முறைகளைச் சுருக்கமாக விவரிக்குக.
4) சனோன் வீவரின் தொடர்பாடல் மாதிரியை வரைந்து அதன் முக்கிய அம்சங்களினை விளக்குக.

05. 1) இலங்கையில் தற்போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் வானொலி அலை (Radio wave) வகை யாது?
2) செய்திப் பத்திரிகைகள் - சஞ்சிகைகள், தொலைக்காட்சி – சினிமா ஆகிய ஊடகங்களின் பெறுநர்களை அறிமுகப்படுத்திக் கொள்ளப் பயன்படும் இரண்டு விசேட பெயர்களை முறையே எடுத்துரைக்க.
3) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூன்று வெவ்வேறு வகைகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.
4) ஊடக அறிக்கையிடலில் பயன்படுத்தக்கூடிய மூலாதாரங்கள் நான்கைச் சுருக்கமாக விவரிக்குக.

www.ikedu.lk

06. 1) "தொடர்பாடல் செயன்முறையில் தொடர்பாளன் மற்றும் பெறுநன் என அறியப்படும் இரண்டு திட்டமான நபர்கள் இருக்க வேண்டும்"

நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக.

2) "செய்திப் பத்திரிகை விளம்பரத்திற்கான கட்டணம், அது செய்திப் பத்திரிகையில் எவ்விடத்தில் தோன்றவுள்ளது என்பதன் அடிப்படையில் மாத்திரமே தீர்மானிக்கப்படும்"

நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உங்கள் விடைக்கான இரண்டு காரணங்களைத் தருக.

3) "சமூகத்திலுள்ள வெவ்வேறு பிரபல கதாபாத்திரங்களை விளம்பரங்களுக்குப் பயன்படுத்துவது வினைத்திறன் மிக்கது"

நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உங்கள் விடைக்கான மூன்று காரணங்களைத் தருக.

4) "தொடர்பாடல் வகைகளில், செல்லிடத் தொலைபேசிகள் ஆட்களிடைத் தொடர்பாடலுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன"

நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? உங்கள் விடைக்கான நான்கு காரணங்களைத் தருக.

07. டினோசி தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்ததன் பின்னர் வெகுசன ஊடக நிறுவனமொன்றில் இணைய ஆவலாயுள்ளார்.

1) இது தொடர்பில் அவர் விண்ணப்பிக்கக்கூடிய அரச வெகுசன நிறுவனங்கள் இரண்டினைப் பெயரிடுக.

2) செய்திப் பத்திரிகை நிறுவனமொன்றின் ஆசிரியர்பீட பதவிநிலை ஒன்றுக்கு விண்ணப்பிக்க டினோசி எதிர்பார்த்துள்ளார். இது தொடர்பில் அவர் விண்ணப்பிக்கக் கூடிய நான்கு பதவிநிலைகளைப் பெயரிடுக.

3) செய்திப் பத்திரிகையொன்றில் செய்திப் புகைப்படங்களைப் பிரசுரிப்பது தொடர்பிலான நான்கு முக்கிய அம்சங்களை விளக்குக.

4) வெகுசனத் தொடர்பாடலின் முக்கிய செயற்பாடுகள் நான்கினையும் பெயரிட்டு, அவற்றுள் இரண்டினை விவரிக்குக.

★★★★★

www.kedu.lk